மூட்டையாகக் கட்ட வழியில்லை. விவசாயிகள் தேவையான அளவுக்குக் கம்பெனிகளிலே போய்வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. மூட்டைகளிலே குறைபாடுகள் வருவது எல்லாம் மத்திய அரசாங்கத்திலேயிருந்து வருகின்றதைப் பொறுத்துத்தான். அதிலேதான் புகார்கள் வருகின்றன. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மாநிலத்திலே உள்ள கம்பெனிகள் விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற அளவுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி 317.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்விக்குப் போய் ஆகிவிட்டது.

*317 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரசாயன உர விலைச் சலுகையை நவம்பர் 30-க்கு பிறகு நீடிக்கச் செய்யும் உத்தேசம் தமிழக அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மெதுவாக விற்பனையாகக்கூடிய உர வகைகளான கால்சியம் அம்மோனியம் நைட்ரேட், டை—அம்மோனியம் பாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட், அம்மோனியம் குளோரைடு, பொட்டாஷ் மியூரியட், வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த எம்.பி.கே. காம்பிளக்ஸ் ஆகிய வற்றைப் பொறுத்தவரையில் 30—11—69 முதல் 31—3—70 வரை இரசாயன உரங்களில் பழைய இருப்புகளைச் சலுகை விலைகளில் விற்க அரசு அனுமதியளித்துள்ளது. எனினும். விரைவாக விற்பனையாகும் அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா போன்ற இரசாயன உரங்கள் குறித்து 1—3—69 முதல் செயலுக்குக் கொண்டுவரப்படும் என்று இந்திய அரசினால் அறிவிக்கப்பட்ட அதிகரித்த தொகுப்பு விலைகள், 1—12—69 அன்று முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன.

திரு. வை. சுவாமிநாதன் : யூரியா, சல்பேட் போன்ற உரங்கள் பழைய ஸ்டாக்காக இருக்கும் காரணத்தால் அவற்றைப் பழைய விலைக்கே விற்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த உரங்களை எல்லாம் பழைய விலைக்கே தான் 10 சதவிகிதம் குறைந்த விலைக்கேதான் கொடுத்துக் கொண்டு வருகிறோம். 1–12–1969லேயே அதிகப்படியான விலைக்கு மாநில அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று கூறிற்று. நாங்கள் மத்திய அமைச்சரிடத்தில் இவற்றைப் பழைய விலைக்கேதான் கொடுக்க வேண்டுமென்று கூறி அவ்வாறு குறைந்த விலைக்குத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

1970 மார்ச் 11]

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : உரத்தின் விலை உயர்ந்து இருப்பது ஒரு பக்கம் இருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்களில் அந்த உரத்தை நிறுத்துக் கொடுக்க மறுக்கிறார்கள். மூட்டைக்கு 2 கிலோ குறைவாக இருக்கிறது. இதன்பேரில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த உரங்கள் 1965–66-ம் ஆண்டுகளிலேயே வாங்கி வைக்கப்பட்ட உரங்கள். இதை ஆந்திர மாநிலமும், கேரள மாநிலமும் வாங்க மறுத்து விட்ட காரணத்தால் அப்போது இருந்த தட்டுப்பாடு காரணமாக 83,000 டன் உரத்தை 23 கோடி ரூபாய்க்கு அப்போதே வாங்கி வைத்துவிட்டார்கள். அப்போதே வாங்கி வைத்ததன் காரணமாக கோணிப் பைகள் நைந்து கிழிந்து போகிற காரணத்தால் குறைவு ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் 10 சதவிகிதம் விலையை ஏற்றிய நிலையிலும் நாங்கள் பழைய விலைக்கே கொடுத்துக் கொண்டு வருகிறோம். இந்த நிலையில் நஷ்டத்தை மத்திய அரசாங்கத்தில் இருந்து கேட்க முடியாத நிலையில் மூட்டைகள் எப்படி இருக்கின்றனவோ அப்படியே கூட்டுறவுச் சங்கங்களில் விற்றுக் கொண்டு வருகிறார்கள்.

திரு. கே. விநாயகம் : மைசூர் மாநிலமும், கேரள மாநிலமும் எடுக்காது போன உரத்தை நாம் எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டு எப்போது எந்த ஆண்டில் யாரால் இந்த உரம் வாங்கப்பட்டது? விலை குறைவாக நாம் விற்பதால் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மைசூர் மாநிலமும், ஆந்திர மாநிலமும் இவற்றை வாங்கி வைக்க துறைமுக வசதி இல்லை என்பதாலும், ஸ்டாக் செய்து வைக்க இட வசதி இல்லை என்பதாலுந்தான் வாங்கி வைக்கவில்லை. அதை வாங்கியது நாங்கள் அல்ல ; காங்கிரஸ் ஆட்சியின்போதே வாங்கி வைக்கப்பட்டு விட்டது. இப்போது பத்து சதவிகிதம் குறைத்து பழைய விலைக்கே விற்பதால் இரண்டரைக் கோடி ரூபாய் நஷ்டம் ஆகிறது. அதுமட்டுமல்லாமல் இவ்வளவு ஆண்டு காலமாகக் கிடங்கில் வைத்திருப்பதால் நாளாவட்டத்தில் தேய்ந்து குறைந்து வருவதாலும் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை மத்திய அரசு ஈடுகட்ட வேண்டுமென்று எழுதிக் கொண்டு வருகிறோம். முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் டில்லிக்குச் செல்லும் போதெல்லாம் வற்புறுத்தி வருகிறார்கள். நானும் மத்திய உணவு அமைச்சர் வந்தபோது அந்த நஷ்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொன்னேன். அவரும் அதுபற்றிக் கவனிப்பதாகக் கூறினார்கள்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : டை—அம்மோனியம் சல்பேட், எம்.பி.கே. மிக்ஸ்சர் போன்ற உரங்கள் கையிலே கூட எடுக்க முடியாத நிலையில் அப்படியே பல கிடங்குகளில் கிடக்கின்றன. கோணிகளை மாற்றி விவசாயிகளுக்குக் கொடுக்கும் போது அந்த விலையைக் கழித்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட ஒரு யோசனை அரசின் பரிசிலனையில் இருக்கிறது. புதிய பொட்டலமாக 'பாக்' செய்து விற்கலாம் என்றாலும் அளவு அப் போதும் குறையத்தான் செய்யும். அதிலே ஏற்படும் நஷ்டத்தை யார் ஏற்றுக் கொள்வது என்ற நிலையிலே அரசாங்கம் அதுபற்றிப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

ஓசூர் கால்நடைப் பண்ணை

* 318 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓசூர் கால்நடைப் பண்ணையில், இனம் வாங்கிய விஷயத்தில் ஏற்பட்ட மோசடியின் காரணமாக, எந்தெந்த அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு கீழ்க்கண்ட அதி காரிகள் மீது வழக்குத் தொடர ஆணை பிறப்பித்துள்ளது :—

(1) டாக்டர் ஐ. டி. மந்திரமூர்த்தி, முன்னாள் கால்நடை இயக்குநர், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை.

(2) டாக்டர் என். திருநாவுக்கரசு, முன்னாள் கண்காணிப்பா வர், கால்நடை ஆராய்ச்சி நிலையம், ஓசூர் விலங்கினப் பண்ணை.

(3) டாக்டர் சி. கோவிந்தன், முன்னாள் பண்ணை மேலாளர், கால்நடை ஆராய்ச்சி நிலையம், ஓசூர் விலங்கினப் பண்ணை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த இனம் வாங்கிய விஷயத்தில் ஏற்பட்ட மோசடியின் விளைவாக எந்த அளவு பணத் தொகை மோசடி செய்யப்பட்டிருக்கிறது? எந்தெந்த விதத்தில் மோசடி செய்திருக்கிறார்கள்? அவர்கள் தப்பித்துக் கொள்ளுவ தற்காக முயற்சிகள் செய்யப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வழக்கு, நீதிமன்றத்தில் இருக்கும் காரணத்தால் உப கேள்விகளுக்குப் பதில் சொல்ல இய லாத நிலையில் இருக்கிறேன்.

Thiru K. S. Kothandaramiah : May I know from the Hon. Minister the present stage of enquiry about this fraud case?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வழக்கு, நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னேன்.

Thiru T. Martin : May I request the Hon. Minister to state the nature of the fraud perpetrated by these officials? I think this will not be *sub judice*, Sir.